கொண்டு, ஸ்காலர்ஷிப் பணத்தைச் செலவு செய்துவிட்டாலும் அதைத் திரும்பக் கட்டிவிட்டு, அனுகூலமான வேறு ஒரு ஸ்காலர் ஷிப்பைப் பெறுவதற்குள்ள கஷ்டமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படியில்லாமல், மாநில கல்வி இலாகாவில் மாணவர்களின் முதல் ப்ரிஃபரன்ஸைக் கேட்டு, அந்தத் திட்டத்தின் கீழ் ஸ்காலர் ஷிப்பை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது குறித்து மேலும் விளக்கங்களைத் தருவார்களானல் நான் பதில் தர முடியும். அடுத்து ஹரிஜன நல மானியக் கோரிக்கை வருகிற காரணத்தினல் கனம் உறுப்பினர் அவர்கள் விளக்கமாகக் கூறலாம். அதற்கு மேல் அது குறித்து நல்ல முறையில் விசாரித்து முடிவு செய்யலாம்.

** 194 வினு.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :* மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் ஹரிஜன சேவா சங்கத்தினரால் நடத்தப்படும் ஹாஸ்டல்களை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமென்ற பிரச்சினை சென்ற ஆண்டு எழுப்பப்பட்டிருந்தும் இறுதி உத்திரவுகள் பிறப்பிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசு உதவி பெறும் மாணவ மாணவியர் இல்லங்கள் அனைத்தையும் படிப்படியாக மேற்கொண்டு அரிசனநலத் துறையின் கண்காணிப்பில் அவற்றை நடத்துவதென அரசு கோட்பாடு வகுத்துள்ளது. சிறாக நிர்வகிக்கப்படாத மாணவ மாணவியர் இல்லங்களை முதற் படியாக அரசு மேற்கொண்டு வருகிறது. மேற்சொன்ன கோட்பாட்டைப் பின்பற்றி 1966–67-ல் மதுரை மாவட்ட அரிசன சேவா சங்கம் நிர்வகிக்கும் மாணவியர் இல்லங்கள் இரண்டினை அரசு மேற்கொள்வதுபற்றி ஆராயப்பட்டது. ஆனல் இந்த இரண்டு இல்லங்களையும் மேற்படி சங்கம் தொடர்ந்து சரிவர நடத்த முடிவு செய்துள்ளதால் இவற்றை அரசு மேற்கொள்வதற்கான தேவை இல்லையென்று கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாழ்த்தப்பட்டோர் நலத் துறைபற்றிய விவாதம் ஒரு நாள் பூராவும் நடக்க இருப்பதால், இதுபற்றிய வினுக்களை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

" வானெலி "

** 195 வினு.—திரு. ஆ. துரையரசன் :* மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

'ஆகாசவாணி' என்பதை 'வானெலி' என்று மாற்ற மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம், ஐயா.